# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.06.03

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 07/2016**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்
வளாக அதிபதிகள்
நிறுவகப் பணிப்பாளர்கள்

## நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars) பதவிக்கான தேர்வுக் குழுவில் திருத்தம் மேற்கொள்ளல்

1982.04.06 ஆம் திகதிய 166 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பொறுப்பாளர் (Bursars) பதவிக்கான தேர்வுக் குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, உயர் கல்வி நிறுவகங்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தொடர்பாக தாபனக் கோவையின் III ஆவது அத்தியாயத்தின் 12 ஆவது பந்தியின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. பல்கலைக்கழகத்தின் பதிவாளர் இல்லாத சந்தர்ப்பத்தின்போது நிதிப் பொறுப்பாளர் பதவிக்கான தேர்வுக் குழுக் கூட்டத்தை நடாத்துவது சம்பந்தமாக தெளிவுபடுத்துவதற்கான வேண்டுகோளை கவனத்திற்கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, நிதிப் பொறுப்பாளர் பதவிக்கான தேர்வுக் குழுக் குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை சம்பந்தமான (இ) உப பந்தியை கீழ் குறிப்பிடும் பிரகாரம் திருமமியமைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.;

அ) பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் தலைவராவார்.

ஆ) ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட ஒரு அங்கத்தவர்.

இ) சந்தர்ப்பத்திற்கேற்ப, பல்கலைக்கழகத்தின் அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அல்லது ''யுனிவர்சிட்டி கொலேஜ்'' நிறுவகத்தின் செயலாளர்;

பல்கலைக்கழகத்தின் நிரந்தர பதிவாளர் இல்லாதபோது அல்லது பதிவாளர் பதவியை வகிக்காத உத்தியோகத்தர் ஒருவர் பதிவாளர் பதவியில் பதில் கடமையாற்றினால் / கடமையை நிறைவேற்றுபவராக இருப்பின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் வேறு பல்கலைக்கழகமொன்றின் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

2 ஆம் பக்கத்திற்கு..........

ஈ) ஒருவர் சிரேஷ்ட அரச உத்தியோகத்தராகும் வகையில் நிர்வாக சபையினால் நியமிக்கப்பட்ட இரு அங்கத்தவர்கள்;

அவ்வாறு நியமித்துக்கொள்ளப்படும் உறுப்பினர்களில் குறைந்தது ஒருவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின், கிரயம் மற்றும் முகாமைத்துவக் கணக்கியல் நிறுவனத்தின் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் கூட்டிணைக்கப்பட்ட கணக்காளர் ஒன்றியத்தின் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

4. தயவுசெய்து இதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள்/ சிரேஷ்ட உதவி நூலகர்கள் / உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/85